## ஒட்டன்சத்திரம் நகராட்சி

1920 ஆம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் அட்டவணை-III விதி எண்.2(2)ன் கீழ் நகர்மன்றத்தின் சாதாரணக் கூட்டமானது 09.01.2024 (செவ்வாய் கிழமை) அன்று முற்பகல் 11.00 மணியளவில் நகராட்சி நகர்மன்ற கூட்ட அரங்கில் நடைபெறும். அது சமயம் நகர்மன்ற துணை தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது

ஒம்/- க.திருமலைசாமி
நகர்மன்றத் தலைவர்
ஒட்டன்சத்திரம்நகராட்சி

நாள்.02.01.2024

| பொருள் எண் | மன்ற பொருள் | கூட்ட நடவடிக்கைகள் |
|---|---|---|
| 1 | ஒட்டன்சத்திரம் நகராட்சி துய்மை இந்தியா இயக்கம் நகர்ப்புறம் 2023-2024-ம் திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த மலக்கசடு மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க நகரின் நலன் கருதி, மேற்படி திட்டத்தை செயல்படுத்த மதிப்பீட்டு தொகை ரூ.552.00 இலட்சம் நிதியில் பணி மேற்கொள்ள, 6-வது வார்டு பழனிக்கவுண்டன் புதூர் நவீன எரிவாயு தகனமேடை பின்புறம் பழைய சர்வே எண்.515/2, புதிய சர்வே எண்.515/2சி-இல் ஹெட்டேர் 0.29.08, ஏக்கர்-0 செண்ட் 72 உள்ள நிலத்தினை சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.3703/2023, நாள்.23.11.2023-இன்படி, மலக்கசடு மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க நகராட்சிக்கு தானமாக பெற்றுத்தந்த **மண்ணின் மைந்தர் மாண்புமிகு உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு.அர.சக்கரபாணி** அவர்களுக்கு இந்நகராட்சியின் சார்பாக நன்றியினை தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றி பார்வைக்கு சமர்ப்பித்தல். | **<u>தீர்மான எண்.1</u>**<br>அனுமதிக்கப்பட்டது |
| 2 | அரசாணை(நிலை) எண்.142, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை, நாள்.23.11.2023-ன்படி, கிராம ஊராட்சிகளை அருகிலுள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுடன் அடுத்த உள்ளாட்சித் தேர்தலுக்கு முன் இணைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டது மேலும் நகர்ப்புற உள்ளாட்சியினை ஒட்டி அமைந்துள்ள ஊராட்சிகளின் வருவாய் மற்றும் மக்கள் தொகை மற்றும் வளர்ந்து வரும் தன்மை ஆகியவற்றை கருத்தில் கொண்டு அருகிலுள்ள நகராட்சிகளுடன் இணைப்பது குறித்தான செயற்குறிப்பிகளை மாவட்ட ஆட்சித்தலைவர், திண்டுக்கல் அவர்களின் பரிந்துரையுடன் செயற்குறிப்பு விவரங்களுடன் முழுவடிவில் அனுப்பி வைத்திட,நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.7145/2023/எம்.ஏ2, 15.12.2023-ம் தேதியிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது<br>ஒட்டன்சத்திரம் நகராட்சி 01.10.2010 முதல் இரண்டாம் நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறதுஇதன் மொத்த பரப்பளவு13.05 சதுர கி.மீ ஆகும். இந்நகராட்சி | **<u>தீர்மான எண்.2</u>**<br>1. அனுமதிக்கப்பட்டது.<br>2. ஒட்டன்சத்திரம் நகராட்சி மக்கள் தொகை மற்றும் உட்கட்டமைப்பு விரிவாக்கம் முதலானவைகளை கருத்தில் கொண்டு இந்நகராட்சி எல்லையை சுற்றியமைந்துள்ள அரசபிள்ளைப்பட்டி ஊராட்சி, காவேரியம்மாபட்டி ஊராட்சி, காப்பிலியபட்டி |

| | | |
|---|---|---|
| | 23 உட்கடை கிராமங்களை உள்ளடக்கி18 வார்டுகளை கொண்ட நகரமாகும். 2011-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கீட்டின்படி , 30064ம், 2021-ஆம் ஆண்டு உத்தேச மக்கள் தொகை 36079 ஆக உள்ளது . இந்நகராட்சி வட -தென் மாவட்டங்களை இணைக்கும் முக்கிய பகுதியாகவும் வளர்ந்து வரும் நகரமாகவும் உள்ளதால், விரிவாக்கம் செய்வது அவசியமாகிறது . கிராம ஊராட்சிகளை இந்நகராட்சியின் விரிவாக்கம் மற்றும் வருவாயினை கருதி , இந்நகர் பகுதியை சுற்றியுள்ள ஊராட்சிகளை இந்நகராட்சியுடன் இணைத்து எல்லை விரிவாக்கம் செய்ய அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பிட கிராம ஊராட்சிகைளை தேர்வு செய்திட நகர்மன்றத்தின் முடிவுக்கும் , அனுமதிக்கும் வைக்கப்படுகிறது .<br><br>**<u>அலுவலககுறிப்பு :-</u>**<br>1. அனுமதிக்கலாம்<br>2. அரசாணை மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித வழிகாட்டுதலின்படி, நடவடிக்கை மேற்கொண்டு அரசுக்கு செயற்குறிப்புஅனுப்ப மன்றம் அனுமதிக்கலாம் .<br>3. மேற்படி செயற்குறிப்புகள் அரசுக்கு அனுப்ப தேவையான ஆவணங்கள் தயார் செய்யும் பணிமேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை 2023-2024-ஆம் ஆண்டு வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம் . | ஊராட்சி, தங்கச்சியம்மாபட்டி ஊராட்சி, கொல்லப்பட்டி ஊராட்சி, காளாஞ்சிபட்டி ஊராட்சி, அத்திக்கோம்பை ஊராட்சி மற்றும் லெக்கையன்கோட்டை ஊராட்சி ஆகிய ஊராட்சிகளை இந்நகராட்சியுடன் இணைக்கவும், அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பி செயல்படுத்த மன்றம் அனுமதிக்கப்பட்டது. |
| 3 | ஒட்டன்சத்திரம் நகராட்சியில் 2022-2023 ஆம் ஆண்டிற்கு தணிக்கை நடைபெற்றதில் தணிக்கைக்கு காண்பிக்க தேவைப்படும் வார்டு எண்.1 முதல் 18 வரைக்கும் சொத்துவரி நடப்பு கேட்பு பதிவேடுகள் மற்றும் நிலுவை கேட்பு பதிவேடுகள், காலியிட வரி நடப்பு கேட்பு பதிவேடுகள் மற்றும் நிலுவை கேட்பு பதிவேடுகள், தொழில்வரி நடப்பு மற்றும் நிலுவை கேட்பு பதிவேடுகள் ஆகியவற்றை பிரிண்ட் எடுத்து பைண்டிங் செய்து ஒப்படைத்தமைக்கான தொகை ரூ.4,732/-க்கு பட்டியல் வரப்பெற்றுள்ளது மேற்படி தொகை ரூ.4,732/- ஸ்ரீ சிவசக்தி பிரிண்ட்டர்ஸ்க்குவழங்க மன்றத்தின் அனுமதிக்குவைக்கப்படுகிறது<br><br>**<u>அலுவலககுறிப்பு:</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம் (நக.எண்.994/2022/அ1) | **<u>தீர்மான எண்.3</u>**<br>அனுமதிக்கப்பட்டது |
| 4 | ஒட்டன்சத்திரம் நகராட்சி பகுதியில் உள்ள 1 முதல் 18 வார்டுகள் அனைத்து பகுதிகளிலும் வீட்டுவரி, குடிநீர்வரி, தொழில்வரி மற்றும் வரியில்லா இனங்களுக்கும் வரி வசூல் பணி மேற்கொள்ளப்பட்டுவருகிறது மேற்படி வசூல்பணியினை துரிதப்படுத்தக்கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மதுரை அவர்களின் ஆய்வுக்கூட்டங்களில் அறிவுறுத்தப்படுவதால் நகர்பகுதியில் வாகனம் மூலம் பொதுமக்கள் அறியும் வண்ணம் ஒலிபெருக்கி மூலம் விளம்பரம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br><br>**<u>அலுவலககுறிப்பு:</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம் (நக.எண்.994/2022/அ1) | **<u>தீர்மான எண்.4</u>**<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 5 | ஒட்டன்சத்திரம் நகராட்சியில் ஆணையாளர் ஈப்பு வாகன எண் .TN 57 AW 2867 பழுதுகள் மற்றும் பாரமரிப்பு பணிகள் மேற்கொள்ள மகேந்திரா நிறுவன பணிமனை (ஆட்டோ மோட்டிவ் மெனுபேக்சுர்ஸ் பிரைவேட் லிமிடெட் , திண்டுக்கல்) நிறுவனத்தில் பழுது பணிகளுக்கு ஒப்படைக்கப்பட்ட நிலையில் , மேற்படி நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ74,102/- ஐ மட்டும் வழங்க நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது<br><br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>1. அனுமதிக்கலாம்<br>2. வாகன பயன்பாட்டின் அவசியம் கருதி , மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி, நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று , மேற்படி நிறுவனத்திற்கு பட்டியல் தொகையினை , மேற்படி நிறுவனத்திற்கு வழங்கவும், அதற்கான செலவினத்தை 2023-2024-ஆம் ஆண்டு வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். | **<u>தீர்மான எண்.5</u>**<br><br>அனுமதிக்கப்பட்டது. |
| 6 | ஒட்டன்சத்திரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு பகுதிகளில் மெயின் மற்றும் குறுக்கு தெருக்களில் உள்ள மரக்கன்றுகள் கால்நடைகளால் சேதமடைவதால், மரக்கன்றுகளுக்கு பாதுகாப்பு இரும்பு வலை தயார் செய்து அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ .5.00 இலட்சம் நகர்மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது<br><br>**<u>அலுவலககுறிப்பு :-</u>**<br>1. அனுமதிக்கலாம் 2023-2024-ஆம் ஆண்டுவருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம் .<br>2. பணியின் அவசர அவசியம் கருதியும் , மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று, ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம் | **<u>தீர்மான எண்.6</u>**<br><br>அனுமதிக்கப்பட்டது. |
| 7 | ஒட்டன்சத்திரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு பகுதிகளில் மெயின் மற்றும் குறுக்கு தெருக்களில் இயற்கை சூழல் மிகுந்த சுற்றுச்சூழல் எழில்மிகு பசுமையுடன் பொதுமக்கள் நலன் பேணும் பொருட்டு, வார்டுபகுதிகளில் மெயின் மற்றும் குறுக்கு தெருக்களில் மரக்கன்றுகள் நட்டு பராமரித்தல் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ15.00 இலட்சம்நகர்மன்றத்தின்நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது<br><br>**<u>அலுவலககுறிப்பு :-</u>**<br>1. அனுமதிக்கலாம் 2023-2024-ஆம் ஆண்டுவருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம் .<br>2. பணியின் அவசர அவசியம் கருதியும் , மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று, ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம் | **<u>தீர்மான எண்.7</u>**<br><br>அனுமதிக்கப்பட்டது. |
| 8 | ஒட்டன்சத்திரம் நகராட்சி 10-வது வார்டு காந்தி மார்க்கெட் பைப்பாஸ் சாலையில் வடக்கு மற்றும் தெற்கு வீதிகளில் மழைநீர் வடிகால்கள் சிதலமடைந்துள்ளதால், மழைக்காலங்களில் மழைநீர் சாலைகளில் செல்வதால், பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும்மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. எனவே காந்தி மார்க்கெட் பைப்பாஸ் சாலையில் வடக்கு மற்றும் தெற்கு வீதிகளில் மழைநீர் வடிகால்கள் அமைத்து, சிமெண்ட் சாலை அமைத்தல் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ9.80 இலட்சம் நகர்மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது | **<u>தீர்மான எண்.8</u>**<br><br>அனுமதிக்கப்பட்டது. |

**அலுவலககுறிப்பு :-**

1. அனுமதிக்கலாம் 2023-2024-ஆம் ஆண்டுவருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம் .
2. பணியின் அவசர அவசியம் கருதியும் ,மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று, ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்

---

9

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.16387/எம்2/2023, நாள்.19.10.2023-இன்படி, முன்னாள் முதல்வர் முத்தமிழ் அறிஞர் டாக்டர்.கலைஞர் திருமு.கருணாநிதி அவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாட்டங்கள் ஒட்டன்சத்திரம் நகராட்சி பகுதியில் உள்ள அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் வரும் 03.12.2023 அன்று மருத்துவ முகாம் நடைபெற்றதை தொடர்ந்து ,மருத்துவத்துறை மூலம் மருத்துவ முகாமை சிறப்பாக நடத்திட தேவையன படிவங்கள் ,ஆவணங்கள் மற்றும் முகாம் பிரசுர நோட்டீஸ் அச்சடித்து வழங்கிய செலவினத் தொகை ரூ.22,400/- நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்
2. மேற்படி மருத்துவ முகாமிற்கு தேவையான நோட்டீஸ் அச்சடித்து பிரசுரம் செய்யும் பணியின் அவசர அவசியம் கருதிநகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று, அதற்கான செலவினத்தை 2023-2024-ஆம் ஆண்டு வருவாய் நிதியிலிருந்துமேற்கொண்டதைமன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண்.9**

அனுமதிக்கப்பட்டது

---

10

ஒட்டன்சத்திரம் நகராட்சிப் பகுதியில், முன்னாள் முதல்வர் முத்தமிழ் அறிஞர் டாக்டர்.கலைஞர் திரு.மு.கருணாநிதி அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு "எழுத்தாளர் கலைஞர்" கலைஞரின் பேனா பொருத்தப்பட்ட "முத்தமிழ் தேர்" அலங்கார ஊர்தி வரவேற்பு ஏற்பாடுகள் செய்ய வரப்பெற்ற விலைப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு

| வ. எண் | பொருள் | A.P.Rதிரிரோஸ் சவுண்டு சர்வீஸ், ஒட்டன்சத்திரம் | சாதிக் சவுண்டு சர்வீஸ், ஒட்டன்சத்திரம் | செல்வி சவுண்டு சர்வீஸ், ஒட்டன்சத்திரம் |
|---|---|---|---|---|
| 1 | ஜமர் பந்தல் | 45000 | 47000 | 50000 |
| 2 | மேட் | 25000 | 30000 | 35000 |
| 3 | ஸ்டேஜ் | 25000 | 27000 | 28000 |
| 4 | சைடு அடைப்பு | 25000 | 30000 | 35000 |
| 5 | சவுண்ட் சிஸ்டம் | 35000 | 37000 | 38500 |
| 6 | ஜெனரேட்டர் | 8000 | 12000 | 9000 |
| 7 | பேன் | 18000 | 16500 | 24000 |
| 8 | சேர் | 15000 | 21000 | 18000 |
| 9 | ஏர் கூலர் | 10000 | 8500 | 16000 |
| | மொத்தம் | 206000 | 229000 | 253500 |

மேற்படி விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள திரு.ஆர்.சையது முகமது, APR திரிரோஸ் சவுண்டு சர்வீஸ் நிறுவனம், ஒட்டன்சத்திரம் விலைப்புள்ளியினை ஏற்று பணி மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**தீர்மான எண்.10**

அனுமதிக்கப்பட்டது

| | | |
|---|---|---|
| | **<u>அலுவலக குறிப்பு</u>**<br>1. அனுமதிக்கலாம்<br>2. கலைஞரின் பேனா பொருத்தப்பட்ட முத்தமிழ் தேர் அலங்கார ஊர்தி வரவேற்பு ஏற்பாடுகளுக்கான பணி மேற்கொள்ள நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று, APR திரிரோஸ் சவுண்டு சர்வீஸ், ஒட்டன்சத்திரம்நிறுவனத்திற்குபணி உத்தரவு வழங்கியதையும், அதற்கான செலவினத்தை 2023-2024-ஆம் ஆண்டு வருவாய் நிதியிலிருந்து மேற்கொண்டதைமன்றம் அங்கீகரிக்கலாம். | |
| 11 | பருவமழை காரணமாக ஒட்டன்சத்திரம் நகராட்சி 1 முதல் 18 வார்டு பகுதிகளில் உள்ள குப்பை கூலங்கள், மண் மேடுகள், வடிகால் மற்றும் மழைநீர் வாய்க்கால் மற்றும் ஓடைகளை தூர்வாறுதல் பணிகள் மேற்கொள்ள உடன் அகற்ற நகர்மன்ற தலைவர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டதை தொடர்ந்து மேற்படி பணிகளை நகர்பகுதியில் மழை காரணமாக வார்டு பகுதிகளில் ஆங்காங்கே வெள் நீர் வெளியேற்றவும் , துர்நாற்றம் வீசுவதை தவிர்க்கும் பொருட்டு , குவியல்களாகவு மேடுகளாகவும் இருந்த குப்பை கூலங்கள் மண் மேடுகளை அகற்றுதல் மற்றும் மழை வெள்ள நீர் வெளியேற்ற வாய்க்கால்களை தூர் வாருதல் பணிகள் மேற்கொண்டக்காக , ஸ்ரீ கிருஷ்ணா எர்த் மூவர்ஸ் , ஒட்டன்சத்திரம் நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ.1,14,660/-ஐ மட்டும் நகர் மன்றத்தின் அனுமதிக்குவைக்கப்படுகிறது<br>**<u>அலுவலககுறிப்பு</u>** :<br>1. அனுமதிக்கலாம்,<br>2. பருவ மழை காரணமாக பொதுமக்களின் பொது நலன் கருதி, மேற்படி பணி மேற்கொண்டமைக்கான பட்டியல் தொகையினை நகர்மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று, அதற்கான செலவினத்தை2023-2024-ஆம் ஆண்டு வருவாய் நிதியிலிருந்து மேற்கொண்டதையும் நகர்மன்றம் அங்கீகரிக்கலாம் | **<u>தீர்மான எண். 11</u>**<br>அனுமதிக்கப்பட்டது |
| 12 | சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கு எண்.W.P.(MD) No.16485/2015, நாள்.15.10.2015-ன்படி, ஒட்டன்சத்திரம் நகராட்சி அரசுக்கு சொந்தமான இடங்கள் மற்றும் தனியாருக்கு சொந்தமான இடங்களில் உள்ள சீமைக்கருவேல மரங்கள் அப்புறப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில், இந்நகராட்சி எல்லை புறவழிச்சாலை மற்றும் அருள்மிகு குழந்தைவேலப்பர் திருக்கோயில் தெற்குதமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிரிப்பு கட்டுமான பணி பகுதிகள் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளிலும், 1 முதல் 18 வார்டு நகர் பகுதிகளிலும் அப்புறப்படுத்தப்படாமல்உள்ள சீமைக்கருவேல மரங்களை உடன் அப்புறப்படுத்த 20.11.2023-ல் நாளில் விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் , வரப்பெற்ற விலைப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு , | **<u>தீர்மான எண். 12</u>**<br>அனுமதிக்கப்பட்டது |

| வ. எண் | விவரம் | எவரெஸ்ட் எர்த் மூவர்ஸ், ஒட்டன்சத்திரம் | அருண் பிரியா எர்த் மூவர்ஸ், ஒட்டன்சத்திரம் | ஸ்ரீ கிருஷ்ணா எர்த் மூவர்ஸ், ஒட்டன்சத்திரம் |
|---|---|---|---|---|
| 1 | கிட்டாட்சி மணி ஒன்றுக்கு (டீசல் ஆயில் மற்றும் டிரைவர் படி உட்பட) | 1950 | 2050 | 1900 |
| 2 | JCB மணி ஒன்றுக்கு (டீசல் ஆயில் மற்றும் டிரைவர் படி உட்பட) | 990 | 1030 | 780 |

| | | |
|---|---|---|
| | மேற்படி பணிக்கு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் ஸ்ரீ கிருஷ்ணா எர்த் மூவர்ஸ், ஒட்டன்சத்திரம் நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக வரப்பெற்றுள்ளதுநகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது<br><br>**அலுவலககுறிப்பு** :<br>1. அனுமதிக்கலாம்,<br>2. பணியின் அவசியம் கருதியும், மேற்படி பணிக்கு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலை விகிதம் அளித்துள்ள, ஸ்ரீ கிருஷ்ணா எர்த் மூவர்ஸ், ஒட்டன்சத்திரம் என்பரின் விலை விகிதத்தினை ஏற்று, நகர்மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று, பணி உத்தரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டதையும் அதற்கான செலவினத்தை 2023-2024-ஆம் ஆண்டு வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள நகர்மன்றம் அனுமதிக்கலாம் | |
| 13 | ஒட்டன்சத்திரம் நகராட்சி 8-வது வார்டு எரிவாயு தகனமேடை செல்லும் சாலையில் கட்டிட இடிபாடு கழிவுகள் மற்றும் குப்பை கூலங்கள் கொட்டப்பட்டு போக்குவரத்துக்கு இடையூறாக உள்ள மண் மேடு குப்பைகளை உடன் அகற்ற நகர்மன்ற தலைவர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டதை தொடர்ந்து மேற்படி போக்குவரத்துக்கு இடையூறாக உள்ள மண் மேடு குப்பைகளை JCB வாகனம் மூலம் அள்ளி டிப்பர் லாரிகளில் அப்புறப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பணி மேற்கொண்ட ஸ்ரீ கிருஷ்ணா எர்த் மூவர்ஸ், ஒட்டன்சத்திரம் நிறுவனத்திடமிருந்து பட்டியல் தொகை ரூ.66,690/-ஐ மட்டும் வழங்க கேட்டு வரப்பெற்றது நகர் மன்றத்தின் அனுமதிக்குவைக்கப்படுகிறது<br>**அலுவலககுறிப்பு** :<br>1. அனுமதிக்கலாம்,<br>2. பொதுமக்களின் மற்றும் போக்குரத்து நலன் மற்றும் பணியின் அவசியம் கருதி, மேற்படி பணி மேற்கொண்டமைக்கான பட்டியல் தொகையினை நகர்மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று, அதற்கான செலவினத்தை2023-2024-ஆம் ஆண்டு வருவாய் நிதியிலிருந்து மேற்கொண்டதையும் நகர்மன்றம் அங்கீகரிக்கலாம் | **தீர்மான எண். 13**<br>அனுமதிக்கப்பட்டது |
| 14 | ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு சொந்தமான காப்பிலியபட்டி கிராமம் புல எண்.614/4C முதல் 659/10-ல் உள்ள ஆகிய எண்களில் உள்ள 18-ஏக்கர், 66-செண்ட் நிலத்தினை ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு தானமாக வழங்கப்பட்டது. மேற்படி நிலத்தில் உரக்கிடங்கில் உரக்குடில் அமைத்துள்ளதை எதிர்த்து காப்பிலியபட்டி கிராமத்தை சேர்ந்த திருபி.கருப்புச்சாமி த/பெ.பெரியண கவுண்டர் என்பவரால் W.P.(MD) No.7176/2022-ன்படி தொடரப்பட்ட வழக்கில் மாண்பமை நீதியரசர் அவர்களால் 20.04.2023-ஆம் நாளில் வழங்கப்பட்ட தீர்ப்புரையினை மேற்கோள் | **தீர்மான எண். 14**<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | காட்டி, மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் மற்றும் ஆணையாளர், ஒட்டன்சத்திரம் நரகாட்சி ஆகியோரின் மீது சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு Contempt Petition (MD) No.2403/2023 and W.P.(MD) No.7176/2022-இன்படி தொடரப்பட்டு வழக்கு விசாரணைக்கு வரப்பெறவுள்ளது மேற்படி வழக்கில் இந்நகராட்சி சார்பாக திரு.சி.ஜெகநாதன் வழக்கறிஞர் வழக்கில் ஆஜராகி வக்காலத்து மற்றும் எதிர்வாதுரை தாக்கல் செய்து வழக்கினை எதிர்கொள்ள வழக்குகட்டணமாக தொகை ரூ.15,000/- மட்டும் வழங்க கேட்டு வரப்பெற்ற பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு.<br>**<u>அலுவலககுறிப்பு</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. வழக்கறிஞருக்கான வழக்கு கட்டணத்தை நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதிபெற்று தொகை வழங்கி நடவடிக்கை மேற்கொண்டதையும் மேற்படி செலவினத்தை 2023-2024-ஆம் ஆண்டு நகராட்சி வருவாய்நிதியிலிருந்துவழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம் | |
| 15 | ஒட்டன்சத்திரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 7-வது வார்டு நாயக்கனூர் பகுதியில் புல எண்.539/2-ல் உள்ள குளத்தினை நகராட்சியால் பராமரிக்க உத்தரவிடக்கோரி திரு.கே.வஞ்சிமுத்து மற்றும் திரு.கே.திருமலைசாமி ஆகியோரால் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் தொடரப்பட்டுள்ள வழக்கு W.P.(MD) No.1496 of 2021-ல் திரு.சி.ஜெகநாதன், உயர்நீதிமன்ற வழக்கறிஞர், மதுரை அவர்களை இந்நகராட்சி சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராகி வழக்கினை நடத்திடவும், அதற்கான செலவினம் தொகை ரூ.15,000/- மட்டும் வழங்க கேட்டு வரப்பெற்றது மன்றத்தின் அனுமதிக்கு<br>**<u>அலுவலககுறிப்பு</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. வழக்கறிஞருக்கான வழக்கு கட்டணத்தை நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதிபெற்று தொகை வழங்கி நடவடிக்கை மேற்கொண்டதையும் மேற்படி செலவினத்தை 2023-2024-ஆம் ஆண்டு நகராட்சி வருவாய்நிதியிலிருந்து வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம் (நக.எண்.180/2013/இ1) | **<u>தீர்மான எண். 15</u>**<br>அனுமதிக்கப்பட்டது |
| 16 | ஒட்டன்சத்திரம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2017-2018-இன் கீழ் இந்நகராட்சி பகுதியில் திடக்கழிவு மக்கும் மற்றும் மக்காத குப்பைகளை தரம் பிரித்து நுண் உரம் தயார் செய்ய உரக்குடில் அமைக்கும் பணிக்காக, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவில் ரூ.220.78 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி அளித்துள்ளதை தொடர்ந்து 9-வது வார்டு தென்றல் நகர் பகுதியில் உரக்குடில் அமைக்கும் பணிக்காக மதிப்பீட்டு தொகை ரூ.65.96 இலட்சத்தில் ஒப்பந்தப்புள்ளி நடைமுறைகளுக்கு பின் பணிகள் துவங்கப்பட்ட நிலையில், திரு.எம்.நல்லதம்பி, த/பெ.முத்து சேதுபதி என்பவரால், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு W.M.P.(MD) No.7736/2018 in W.P.(MD) No.8185/2018 வழக்கு தொடரப்பட்டதில், மேற்படி வழக்கில் நகராட்சிக்கு எதிராக மேற்படி பூங்கா | **<u>தீர்மான எண். 16</u>**<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | இடத்தில் உரக்குடில் அமைக்கும் பணிக்கு தடையாணை வழங்கி தீர்புரை வழங்கப்பட்டதை தொடர்ந்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.29833/பி3/2018, நாள்.07.12.2018-இன்படி, தென்றல்நகர் பகுதியில் உரக்குடில் அமைக்கும் பணியை கைவிடப்பட்டு, மாற்றாக சின்னக்குளம் மேற்கு பகுதியில் மாற்றியமைக்கப்பட்டு பணிகள் முடிவுற்று தற்போது பயன்பாட்டில் உள்ளது. மேற்படி வழக்கில் இந்நகராட்சி சார்பாக திரு.சி.ஜெகநாதன் வழக்கறிஞர் ஆஜராகி எதிர்வாதுரை தாக்கல் செய்து வழக்கினை எதிர்கொண்டு முடிவுக்கு கொண்டு வந்தமைக்கான கட்டணம் தொகை ரூ.15,000/-மட்டும் வழங்க கேட்டு வரப்பெற்றது மன்றத்தின் அனுமதிக்கு<br><br>**<u>அலுவலககுறிப்பு</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. வழக்கறிஞருக்கான வழக்கு கட்டணத்தை நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதிபெற்று தொகை வழங்கி நடவடிக்கை மேற்கொண்டதையும், மேற்படி செலவினத்தை 2023-2024-ஆம் ஆண்டு நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்யிதையும் மன்றம் அங்கீகரிக்கலாம் | |
| 17 | ஒட்டன்சத்திரம் நகராட்சிக்குட்பட்ட தென்றல் நகரில், புல எண்.229/ஏ, 229/பி மற்றும் 229/சி-இல் நகராட்சியால் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் மலக்கசடு மேலாண்மை மற்றும் உபயோகிக்கப்பட்ட நீரினை சுத்திகரிக்கும் பணிக்காக, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி மேற்கொள்வது தொடர்பாக திரு.பி.செந்தில்வேல் என்பவரால் , இந்நகராட்சிக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை வழக்கு W.P.(MD) No.16600/2023-இன்படி, தொடர்ந்த வழக்கில் , மாவட்ட ஆட்சித்தலைவர் , திண்டுக்கல் -(1), ஆணையாளர் , ஒட்டன்சத்திரம் நகராட்சி -(2), இயக்குநர் , நகர் ஊரமைப்பு இயக்கம் , சென்னை -(3 ஆகியோர்களை பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டு தொடரப்பட்ட வழக்கில், வழங்கப்பட்ட தீர்ப்புரையினை எதிர்த்து, மேற்படியாரால், மேல்முறையீட்டு வழக்கு எண்.W.A(MD)No.2131/2023 மற்றும் C.M.P(MD)No.17031/2023-இன்படி, தொடரப்பட்ட வழக்கில் இந்நகராட்சி சார்பாக திரு.சி.ஜெகனாதன் வழக்கறிஞர் ஆஜராகி வழக்கினை முடிவுக்கு கொண்டு வரப்பெற்றமைக்கான பட்டியல் தொகை ரூ.15,000/- நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது<br><br>**<u>அலுவலககுறிப்பு</u>**<br>1. அனுமதிக்கலாம்<br>2. மேற்படி வழக்கறிஞரிடமிருந்து வரப்பெற்ற வழக்கு கட்டணம் நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று, பட்டியல் தொகை வழங்கியதையும், அதற்கான செலவினத்தை 2023-2024-ஆம் ஆண்டு வருவாய் நிதியிலிருந்துமேற்கொண்டதையும்மன்றம் அங்கீகரிக்கலாம் | **<u>தீர்மான எண். 17</u>**<br>அனுமதிக்கப்பட்டது. |
| 18 | ஒட்டன்சத்திரம் நகராட்சிக்குட்பட்ட தென்றல் நகரில், புல எண்.229/ஏ, 229/பி மற்றும் 229/சி-இல் நகராட்சியால் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் மலக்கசடு மேலாண்மை மற்றும் உபயோகிக்கப்பட்ட நீரினை சுத்திகரிக்கும் பணிக்காக, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி மேற்கொள்வது தொடர்பாக திரு.பி.செந்தில்வேல் என்பவரால் , இந்நகராட்சிக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை வழக்கு W.P.(MD) No.16600/2023-இன்படி, | **<u>தீர்மான எண். 18</u>**<br>அனுமதிக்கப்பட்டது. |

தொடர்ந்த வழக்கில் ,மாவட்ட ஆட்சித்தலைவர் ,திண்டுக்கல் -(1),ஆணையாளர் , ஒட்டன்சத்திரம் நகராட்சி -(2),இயக்குநர் ,நகர் ஊரமைப்பு இயக்கம் ,சென்னை -(3 ஆகியோர்களை பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டு தொடரப்பட்ட வழக்கில், திரு.வீரகதிரவன், கூடுதல் அட்வகேட் ஜெனரல் (AAG-III) மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை, மதுரை அவர்கள் மற்றும் திரு.டி.பர்ஜனா கௌசியா , சிறப்பு அரசு வழக்கறிஞர் 21.09.2023-இல் ஆஜராகி வழக்கினை எதிர்கொண்டமைக்கான வழக்கு கட்டணத் தொகை ரூ.15,000/-+ரூ.5,000/- என மொத்தம் ரூ20,000/- மட்டும் வழங்க கேட்டு வரப்பெற்ற பட்டியல் நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**அலுவலகக்குறிப்பு**

1. அனுமதிக்கலாம்
2. மாவட்ட ஆட்சியர் ,திண்டுக்கல் அவர்களின் கடித ந.க.எண்.34384/2022/சி6,நாள்.12.10.2023-இன்படி ,கூடுதல் அட்வகேட் ஜெனரல் (AAG-III) மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை, மதுரை அவர்களை வழக்கின் முக்கியத்துவம் கருதி , மாவட்ட ஆட்சித்தலைவர், திண்டுக்கல் அவர்களின் சார்பாக இவ்வழக்கில் ஆஜராக நகராட்சி மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டதன் நடவடிக்கையாக ,வரப்பெற்ற வழக்கு கட்டணம் நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ,பட்டியல் தொகை வழங்கியதையும், அதற்கான செலவினத்தை 2023-2024ஆம் ஆண்டு வருவாய் நிதியிலிருந்துமேற்கொண்டதையும்மன்றம் அங்கீகரிக்கலாம்

---

19

ஒட்டன்சத்திரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு பகுதிகளில் மெயின் மற்றும் குறுக்கு தெருக்களில் மரக்கன்றுகளுக்கு பாதுகாப்பு இரும்பு வலை அமைத்தல் பணிக்கு தொகை ரூ5.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள , 22.11.2023-இல் நகர்மன்ற தலைவர் அவர்களால் முன்அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிக்காக 06.12.2023-இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள்கீழ்க்கண்டவாறு

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.ஹச்.முகமதுரஸ்மி | 0.07% மதிப்பீட்டுவிலையில் குறைவு |
| 2 | திரு.கே.சுரேஷ்குமார் | 1.32% மதிப்பீட்டுவிலையில்கூடுதல் |

மேற்படி இரண்டு ஒப்பந்ததாரர்களிடமிருந்து டேவணித் தொகை வரப்பெற்ற நிலையில்,மேற்படி பணிக்கு திரு.பி.வேலுச்சாமி ஒப்பந்ததாரரின் 0.07% மதிப்பீட்டு விலை விகிதத்தில் குறைவாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்
2. மேற்படி பணியின் அவசியம் கருதி, மதிப்பீட்டு விலையில் 0.07% குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.பி.வேலுச்சாமி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியின் விலை விகிதத்தை ஏற்று,நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ,பணி ஆணை வழங்கி,பணி மேற்கொண்டதையும் நகர்மன்றம் அங்கீகரிக்கலாம்

**தீர்மான எண்.19**

அனுமதிக்கப்பட்டது

<table>
<tr>
<td>20</td>
<td>
ஒட்டன்சத்திரம் நகராட்சி எல்லைகுட்பட்ட வார்டு பகுதிகளில் மெயின் மற்றும் குறுக்கு தெருக்களில் இரு புறமும் மரக்கன்று நட்டு பராமரித்தல் பணிக்கு தொகை ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள 22.11.2023-இல் நகர்மன்ற தலைவர் அவர்களால் முன்அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து மேற்படி பணிக்காக 06.12.2023-இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.பி.வேலுச்சாமி</td><td>0.04% மதிப்பீட்டுவிலையில்குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.கே.பாலசுப்பிரமணியன்</td><td>1.27% மதிப்பீட்டு விலையில்கூடுதல்</td></tr>
</table>
மேற்படி இரண்டு ஒப்பந்ததாரர்களிமிருந்து டேவணித் தொகை வரப்பெற்ற நிலையில் மேற்படி பணிக்கு திரு.பி.வேலுச்சாமி ஒப்பந்ததாரரின் 0.04% மதிப்பீட்டு விலை விகிதத்தில் குறைவாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கு வைக்கப்படுகிறது<br>
<u>அலுவலக குறிப்பு</u><br>
1. அனுமதிக்கலாம்<br>
2. மேற்படி பணியின் அவசியம் கருதி, மதிப்பீட்டுவிலையில் 0.04% குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.பி.வேலுச்சாமி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியின் விலை விகிதத்தை ஏற்று, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று, பணி ஆணை வழங்கி, பணி மேற்கொண்டதையும் நகர்மன்றம் அங்கீகரிக்கலாம்
</td>
<td><u>தீர்மான எண்.20</u><br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>21</td>
<td>
ஒட்டன்சத்திரம் நகராட்சி 10-வது வார்டு காந்தி மார்க்கெட் பைப்பாஸ் சாலையில் வடக்கு மற்றும் தெற்கு வீதிகளில் மழைநீர் வடிகால் அமைத்து, சிமெண்ட் சாலை அமைத்தல் பணிக்கு தொகை ரூ.9.80 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள, 24.11.2023-இல் நகர்மன்ற தலைவர் அவர்களால் முன்அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து மேற்படி பணிக்காக 08.12.2023-இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில்வரப்பெற்றஒப்பந்தப்புள்ளிகள்கீழ்க்கண்டவாறு
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.எம்.முத்துக்கண்ணன்</td><td>0.06% மதிப்பீட்டுவிலையில்குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.கே.பாலசுப்பிரமணியன்</td><td>1.27% மதிப்பீட்டு விலையில்கூடுதல்</td></tr>
</table>
மேற்படி இரண்டு ஒப்பந்ததாரர்களிமிருந்து டேவணித் தொகை வரப்பெற்ற நிலையில் , மேற்படி பணிக்கு திரு .எம்.முத்துக்கண்ணன் ஒப்பந்ததாரரின் 0.06% மதிப்பீட்டு விலை விகிதத்தில் குறைவாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கு வைக்கப்படுகிறது<br>
<u>அலுவலக குறிப்பு</u><br>
1. அனுமதிக்கலாம்<br>
2. மேற்படி பணியின் அவசியம் கருதி, மதிப்பீட்டு விலையில் 0.06% குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எம்.முத்துக்கண்ணன் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியின் விலை விகிதத்தை ஏற்று, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று, பணி ஆணை வழங்கி, பணி மேற்கொண்டதையும் நகர்மன்றம் அங்கீகரிக்கலாம்
</td>
<td><u>தீர்மான எண்.21</u><br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 22 | அரசாணை (4D)எண்.23,நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (SS&FC)துறை,நாள்.01.12.2022-இல் ஒட்டன்சத்திரம்நகராட்சிக்கு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2022-2023-ன் கீழ் பங்கு தொகை ரூ.1063.00 இலட்சமும் மற்று நகராட்சி பங்குத் தொகை ரூ.1062.00 இலட்சம் என மொத்தம் ரூ.2125.00 இலட்ச மதிப்பீட்டில் காந்தி மார்க்கெட்டில் கடைகள் கட்டும் பணிகள் மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வரப்பெற்றதை தொடர்ந்து ,நகராட்சி நிர்வாக இயக்குநர் , சென்னை அவர்களின் செயல்முறை ந.க.எண்.001/2022/டிஓ1,நாள்.07.12.2022-இ தொழில்நுட்ப அனுமதி பெற்று,ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்பந்ததாரருக்கு 05.01.202 இல் பணி உத்தரவு வழங்கப்பட்டு,மேற்படி காந்தி மார்க்கெட்டி கடைகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றது .மேலும் பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ள நிலையில் ,கட்டுமான பணிக்கான செலவினங்கள் நகராட்சி பங்கு தொகையில் செலவிட வேண்டியிருப்பதால் ,மேற்படி காந்தி மார்க்கெட் கடைகளுக்கு 22.12.20 ம் தேதிக்கு முன்பொதுஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மாநில அளவில் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியீடு செய்ய செய்தி மக்கள் தொடர்பு துறை, சென்னை வாயிலாக கோரப்பட்டதில்Ravi Publicity Service,Chennai நிறுவனம் மூலம் 26.11.2023-ஆம் நாளைய தினகரன்மற்றும் டெக்கான் குரோனிக்கிள் ஆகிய தினசரி நாளிதழ்களில் விளம்பரம் வெளியீடு செய்தமைக்காக மேற்படி நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ.4,60,740/-மேற்படி நிறுவனத்திற்கு வழங்க நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது<br>**அலுவலக குறிப்பு**<br>1. அனுமதிக்கலாம்<br>2. மேற்படி திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் காந்தி மார்க்கெட் வளாக கடைகள் மற்றும் இதர இனங்களுக்கு முன்பொதுஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மாநில அளவில் இயக்குநர் ,தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தி விளம்பரத் துறை,சென்னை அவர்களின் வெளியீட்டு ஆணை எண்.6331/ஒப்பந்தப்புள்ளி /விளம்பரம் 2023,நாள்.25.11.2023-இன்படி விளம் வெளியீடு செய்தமைக்கான பட்டியல் தொகையினை ,மேற்படி நிறுவனத்திற்கு வழங்கவும், அதற்கான செலவினத்தை 2023-2024-ஆம் ஆண்டு வருவாய் நிதியிலிருந்து மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம் | **தீர்மான எண்.22**<br>அனுமதிக்கப்பட்டது |
| 23 | ஒட்டன்சத்திரம் நகராட்சி பகுதியில் உள்ள 1 முதல் 18 வார்டுகள் அனைத்து பகுதிகளிலும் வீட்டுவரி, குடிநீர் கட்டணம் மற்றும் தொழில்வரி வரி வசூல் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதிக நிலுவை மற்றும் நடப்பு கோப்பு தொகை செலுத்தாதவர்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் 2023 விதிகளின்படி, உரிய இறுதி அறிவிப்புகள் அனுப்பி வசூல் பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதால், அறிவிப்பு புத்தகங்கள் அச்சடித்து கொள்ள ஆகும் செலவினம் ரூ.50,000/-மட்டும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br>**அலுவலககுறிப்பு :-**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. அவசர அவசியம் கருதி, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கைகள் மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்( ந.க.எண்.994/2022/அ1) | **தீர்மான எண்.23**<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 24 | ஒட்டன்சத்திரம் நகராட்சி காப்பிலியபட்டி கிராமத்தில் உள்ள இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய உரக்கிடங்கு தொடர்பாக ,காப்பிலியபட்டி கிராமத்தை சேர்ந்த திரு.கருப்புச்சாமி என்பவரால் மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் மற்றும் ஆணையாளர், ஒட்டன்சத்திரம் நரகாட்சி ஆகியோரினை பிரதிவாதிகளாக சேர்த்து சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு Contempt Petition (MD) No.2403/2023 and W.P.(MD) No.7176/2022-இன்படி தொடரப்பட்டு வழக்கு விசாரணைக்கு வரப்பெறவுள்ளதால், காப்பிலியபட்டி உரக்கிடங்கில் நகராட்சியல் செயல்படுத்தப்படும் பணிகளையும் காப்பிலியபட்டி உரக்கிடங்கு தற்போதைய நிலையினை நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டியுள்ளதால் உரக்கிடங்கு மற்றும் நுண்உரக்குடில்கள் முதலானவைகளை வீடியோ கவரேஜ்,புகைப்படம் மற்றும் ட்ரோன் கேமரா புகைப்படங்கள் எடுத்து ஆல்பம் மற்றும் ஆவணங்கள் முதலானவைகள் தயார் செய்து வழங்கியமைக்கான தொகை ரூ.82,000/-மட்டும் வழங்க கேட்டு விநாயகா ஸ்டுடியோ மற்றும் ஜெராக்ஸ் ,ஒட்டன்சத்திரம் நிறுவனத்தின் பட்டியல் வரப்பெற்றது நகர்மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது<br>**<u>அலுவலககுறிப்பு :-</u>**<br>1. அனுமதிக்கலாம்<br>2. காப்பிலியபட்டி உரக்கிடங்கு மற்றும் திட்டப்பணிகளின் விவரங்களை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் சமர்ப்பிக்கும் பொருட்டு , புகைப்படம் ,வீடியோ கவரேஜ் மற்றும் ட்ரோன் கேமரா மூலம் பணி மேற்கொண்டமைக்கான பட்டியல் தொகையினை , நகர்மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று, நடவடிக்கைகள் மேற்கொண்டதையும், அதற்கான செலவினத்தை 2023-2024-ஆம் ஆண்டு வருவாய் நிதியிலிருந்து மேற்கொண்டதைமன்றம் அங்கீகரிக்கலாம் . | **<u>தீர்மான எண்.24</u>**<br>அனுமதிக்கப்பட்டது |
| 25 | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பொற்கால ஆட்சியில், ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு திட்ட நிதிகள் பெற்று தந்தமைக்கும் ,மகளிர் உரிமைத்திட்டம் ,முத்தமிழ் அறிஞர் டாக்டர் .கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மாபெரும் இலவச சிறப்பு மருத்துவ முகாம் ,மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களால், நகர் பகுதியில் மூன்று இடங்களில் நடைமேடை அமைப்பதற்கு அனுமதி பெற்றுத்தந்தமைக்கும் ,மேற் திட்டங்கள் மூலம் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்டப்பணிகளை 15.09.2023, 23.10.2023,25.10.2023 மற்றும் 29.11.2023,02.12.2023,15.12.2023 ஆகிய தினங்க நகர்மன்றத்தின் சார்பாக, தமிழ்நாடு அரசின் சாதனையாக விளம்பர வெளியீடு செய்த வகையில் ,வரப்பெற்ற பட்டியல் தொகையை கீழ்க்காணும் நாளிதழ் நிறுவனங்களுக்குவழங்க நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது | **<u>தீர்மான எண்.25</u>**<br>அனுமதிக்கப்பட்டது |

| வ.எண் | நாளிதழ் பெயர் | வெளியீடுசெய்த நாள் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | தினத்தந்தி நாளிதழ் | 25.10.2023 | 47644 |
| 2 | தினத்தந்தி நாளிதழ் | 15.09.2023 | 47644 |
| 3 | தினத்தந்தி நாளிதழ்(தொழில் மலர்) | 23.10.2023 | 25525 |
| 4 | மக்கள் முகம் நாளிதழ் | 08.12.2023 | 16632 |
| 5 | மாலை மலர் (தீபாவளி சிறப்பு மலர்) | நவம்பர்-2023 | 18900 |
| 6 | நவ் இந்தியர் டைம்ஸ் (தொழில் மலர்) | நவம்பர்-2023 | 13000 |
| 7 | தினகரன் நாளிதழ் | 29.11.2023 | 43312 |
| 8 | தினகரன் நாளிதழ் | 02.12.2023 | 33600 |
| 9 | மாலை தமிழகம் நாளிதழ் | 29.11.2023 | 23100 |
| 10 | ஈவினிங் தமிழ்நாடு நாளிதழ் | 29.11.2023 | 23100 |
| 11 | மாலை மலர் நாளிதழ் | 15.12.2023 | 15250 |
| 12 | தினமலர் நாளிதழ் | 15.12.2023 | 46777 |
| 13 | தினகரன் நாளிதழ் | 15.12.2023 | 43050 |
| 14 | ஈவினிங் தமிழ்நாடு நாளிதழ் | 21.12.2023 | 23100 |
| 15 | தமிழ் சுடர் தினசரி நாளிதழ் | 31.12.2023 | 7950 |

**அலுவலககுறிப்பு :-**

1. அனுமதிக்கலாம்

இந்நகராட்சியில் நடைபெற்று வரும் திட்டப்பணிகளை விளம்பர வெளியீடு செய்தமைக்கானபட்டியல் தொகையினை, நாளிதழ் நிறுவனங்களுக்குவழங்கவும், அதற்கான செலவினத்தை 2023-2024-ஆம் ஆண்டு வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும்மன்றம் அனுமதிக்கலாம் .

---

26

ஒட்டன்சத்திரம் நகராட்சி பொதுபிரிவு மற்றும் பொறியியல் பிரிவு ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறயிளர் ஈப்பு வாகனங்கள் ஆயுட் காப்பீடு 03.01.2024 மற்றும் 09.01.2024-உடன் முடிவடையவுள்ளதால் , கீழ்க்கண்ட வாகனங்களுக்கு ஆயுட்காப்பீடு தொகைசெலுத்த வேண்டியவிவரம் பின்வருமாறு ,

| வ.எண் | வாகன எண்/வகை | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | TN 57 AW 2867 (Commissioner Vehicle) | 11092 |
| 2 | TN 57 AW 4037 (Municipal Engineer Vehicle) | 11104 |
| | மொத்தம் | 22196 |

மேற்கண்ட வாகனங்களுக்கு ஆயுட் காப்பீடு செய்ய The New India Assurance Co.Ltd, Dindigul நிறுவனத்திற்குதொகை செலுத்த நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்
2. மேற்படி வாகனங்களுக்கு ஆயுட்காப்பீடு அவசர அவசியம் கருதி, ஆயுட் காப்பீடு தொகை செலுத்த மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி, நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று, ஆயுட் காப்பீடு தொகை செலுத்தியதையும், அதற்கான செலவினத்தை 2023-2024-ஆம் ஆண்டு வருவாய் நிதியிலிருந்து மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம் .

**தீர்மான எண்.26**

அனுமதிக்கப்பட்டது.

---

27

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு சொந்தமான பேருந்துநிலையத்தின் நுழை வாயிலில் அமைக்கப்பட்டுள்ள அம்மா உணவகத்தில் தினசரி பயன்படுத்தப்பட்டு வரும் அடுப்புகள் மற்றும் இட்லி தயார் செய்யும் இயந்திரங்களில் ஏற்பட்டுள்ள பழுதுகள் சரிசெய்யும் பணிகள் மேற்கொள்ள நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று, 02.11.2023-இல் மேற்படி பணிக்கு உள்ளூரில் விலைப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளதில், கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதுநகர் மன்றத்தின் பார்வைக்கும் , அனுமதிக்கும்வைக்கப்படுகிறது

| வ. எண் | விவரம் | Qty | Surya Home Appliances, Oddanchatram | Anandham Electronics, Palani | Karthikeyan Electricals, Palani |
|---|---|---|---|---|---|
| 1 | Water Line Check Volve set | 1 | 8500 | 8650 | 9000 |
| 2 | Idly Steam Box Check Volve | 1 | 3400 | 3400 | 3400 |
| 3 | Steam SS Valve | 1 | 1800 | 1800 | 2000 |
| 4 | Water Glass pipe | 1 | 600 | 850 | 925 |

**தீர்மான எண்.27**

அனுமதிக்கப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5 | Idly Steamer Box SS Pipe fittings | 1 | 4800 | 4800 | 4800 |
| 6 | Brass Ball Volve ¾ inch | 2 | 1700 | 2200 | 2350 |
| 7 | Brass Ball Volve ½ inch | 1 | 550 | 550 | 550 |
| 8 | 1 Feet MS Pipe | 1 | 600 | 600 | 800 |
| 9 | MS Union ¾ inch | 1 | 750 | 750 | 750 |
| 10 | MS H Nipple ¾ inch | 1 | 160 | 220 | 350 |
| 11 | MS Elbow ¾ inch | 1 | 380 | 380 | 380 |
| 12 | Packing Set | 1 | 4500 | 4750 | 4750 |
| 13 | MS Coupling ¾ inch | 1 | 370 | 370 | 370 |
| 14 | Small and Small Gas tube | 1 | 450 | 450 | 450 |
| 15 | Steam temperature meter set | 1 | 2800 | 2800 | 3200 |
| 16 | Steam Drum work punch material | - | 1250 | 1250 | 1250 |
| 17 | Bolt, Nut | - | 350 | 350 | 350 |
| 18 | Lathe and welding work | - | 2800 | 3200 | 3400 |
| 19 | Service fitting, cleaning, painting charges | - | 7500 | 8000 | 8000 |

**அலுவலககுறிப்பு :**

1. அனுமதிக்கலாம்
2. மேற்படி பணியின்அவசியம் கருதியும் ,மேற்படி பணிக்கு வரப்பெற்றமூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலை விகிதம் அளித்துள்ள, A Surya Home Appliances, ஒட்டன்சத்திரம் என்பரின் விலை விகிதத்தினை ஏற்று, நகர்மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று, நடவடிக்கை தொடர்ந்ததையும், மேற்படி செலவினத்தை 2023-2024-ஆம் ஆண்டு நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள நகர்மன்றம் அங்கீகரிக்கலாம்

| | | |
|---|---|---|
| 28 | ஒட்டன்சத்திரம் நகராட்சி வழியாக பழனி பாலதண்டாயுதபாணி திருக்கோவில் தைப்பூச திருவிழா 2024-ஆம் ஆண்டு 25.01.2024-ஆம் நாள் நடைபெறவுள்ளதை தொடர்ந்து, நகராட்சி வழியாக பாதையாத்திரை பக்தர்கள் அதிகளவில் செல்வதால், பாதையாத்திரை செல்லும் பக்தர்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர், வேணல் பந்தல், தற்காலிக கழிவறை மற்றும் தற்காலிக தெருமின்விளக்குகள் பொதுசுகாதார பயன்பாட்டிற்கான கிருமி நாசினிகள் கொள்முதல் மற்றும் பிளாஸ்டிக் ஒழிப்பு விழிப்புணர்ச்சி தட்டிகள் முதலான பணிகள் மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.5.00 இலட்சம் நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது . | **தீர்மான எண். 28** அனுமதிக்கப்பட்டது |

**அலுவலககுறிப்பு :-**

1. அனுமதிக்கலாம்
2. பழனி பாதையாத்திரை செல்லும் பக்தர்களுக்கு அடிப்படை வசதிகளின் அவசியம் கருதி, நகர்மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று, பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை 2023-2024-ஆம் ஆண்டு வருவாய் நிதியிலிருந்துமேற்கொள்ளவும்மன்றம் அனுமதிக்கலாம் .

| | | |
|---|---|---|
| 29 | தமிழ்நாடு நகரப்புற உள்ளாட்சிஅமைப்புகள் விதிகள்2023-ன் படி நகராட்சி பகுதிகளில் நடைபெறும் வர்த்தகம் மற்றும் வியாபாரங்கள், தொழிற்சாலைகள், தொழிலகம் மற்றும் மற்ற நோக்கங்களுக்காக உரிமம் வழங்கிட உரிமம் வழங்குவதற்கான நிறுவனங்களின் வகைப்பாட்டினை அட்டவணை I, II, மற்றும் III-ல் வகைப்படுத்தி குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச கட்டணங்களின் அடிப்படையில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு தகுந்தார் போல் நிர்ணயம் செய்து உரிமம் வசூலித்துஉரிமம் வழங்கிட வேண்டியுள்ளது தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள் 2023-ல் தொழில் உரிமங்கள் வழங்குவது குறித்த விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தணைகள் மற்றும் விதிமுறைகள் மண்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது இதன்படி இந்நகராட்சி பகுதியில் இயங்கி வரும் தொழில்களுக்கு பின்வரும் விவரப்படி உரிமக் கட்டணம் 01.04.2024-ஆம் தேதி முதல் நிர்ணயம் செய்து தொழில் உரிமம் வழங்கிட மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது<br>**வர்த்தகம் மற்றும் வியாபாரங்கள்,தொழிற்சாலைகள், தொழிலகம் மற்றும் மற்ற நோக்கங்களுக்காக உரிமம்**<br>வர்த்தக உரிமத்திற்கான விண்ணப்பம்(1) அட்டவணைகள் I, II, மற்றும் III-ல் குறிப்பிட்டுள்ள, பொது அல்லது தனியார் என எந்தவொரு வர்த்தகம் அல்லது வியாபாரத்தினையும் ஆணையாளரால் வழங்கப்பட்ட ஒரு உரிமமின்றி நகராட்சி எல்லைக்குள் எவரும் மேற்கொள்ளக்கூடாது<br>அத்தகைய உரிம வழங்குவதற்கான ஒவ்வொரு விண்ணப்பமும் , ஒட்டன்சத்திரம் நகர் மன்றத்தால்வரையறுக்கப்பட்ட கட்டணத்துடன் படிவம்- இல் ஆணையாளருக்கு சமர்பிக்கப்பட வேண்டும் மற்றும் பின்வரும் ஆவணங்கள் அத்துடன் இணைக்கப்பட வேண்டும்<br>தனி நபரைப் பொறுத்தவரையில் ஆதார் அட்டை மற்றும் நபர்களின் குழு அல்லது நிறுவனத்தினைப் பொறுத்தவரையில் நிலையான கணக்கு எண் அட்ட அல்லது கூட்டுரும சான்றிதழ் போன்ற அடையாள சான்று<br>உரிமம் விண்ணப்பிக்கப்படுகிற வர்த்தகம் அல்லது வியாபாரத்தின் முகவரியை தெளிவாக காண்பிக்கும் குத்தகை பத்திரம் அல்லது வருமானம் ஒப்பந்தம் அல்லது சமீபத்திய சொத்து வரி ரசீது அல்லது சமீபத்திய பொருட்கள் மற்றும் சேவைகள் வரி விவர அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்<br>செல்லுபடியாகக் கூடிய முகவரிச்சான்று எதுவும் விண்ணப்பதாரரிடம் இல்லையெனில், அவர் படிவம் 17-இல் பிரமாணம் செய்யப்பட்ட உறுதிமொழி ஆவணத்தினை சமர்பிக்க வேண்டும்<br>அட்டவணை 1-ன் கீழான விண்ணப்பங்களுக்கு , நிறுவனத்தின் வகைப்பாடு குறித்து தீர்மானிப்பதற்கு உதயம் பதிவுச்சான்றிதழ் அல்லது சமீபத்திய பொருட்கள் மற்றும் சேவைகள் வமி விபர அறிக்கை அல்லது வருமான வரி விபர அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்<br>உதயம் பதிவுச் சான்றிதழ் அல்லது எந்தவொரு வரி விபர அறிக்கையும் | **தீர்மான எண். 29**<br>அனுமதிக்கப்பட்டது |

விண்ணப்பதாரரிடம் இல்லையெனில் அவர் உரிமம் கோரப்படுகிற நிறுவனத்தின் வகைப்பாட்டினை சான்றளிக்கும் படிவம் 18-இல் செய்யப்பட்ட உறுதிமொழி ஆவணத்தினை சமர்பிக்க வேண்டும்

அதன் பயன்பாட்டுக்கு உள் விதி )1)-ன் கீழ் உரிமம் தேவைப்படுகிற ஒவ்வொரு இடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பவரும் ,அத்தகைய நோக்கங்களுக்காக அந்த இடம் பயன்படுத்தப்படுவதற்கு முன்பு45 நாட்களுக்கு குறையாமலும், 90 நாட்களுக்கு மிகாமலும் அத்தகைய உரிமத்திற்காக ஆணையாளரிடம் விண்ணப்பிக்கவேண்டும்

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள்2023 விதி எண் 289 விதி )5)ன் கீழ் வழங்கப்பட்ட உரிமம் ,பிரிவு )6)-ல் வரையறுக்கப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டதாகும்

உரிமம் புதுப்பிப்பதற்கான ஒவ்வொரு விண்ணப்பமும் உரிமம் காலாவதியாவதற்கு மூன்று மாதத்திற்கு முன்பு மன்றத்தால் நிர்ணயிக்கப்படுகிற உரிமக் கட்டணத்துடன் படிவம்1-ல் ஆனையாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்

உரிமம் புதுப்பிப்பதற்கான விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படும் போது உரிமம் பெறுபவரால் நகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய வரி அல்லது கட்டணம் எதுவு நிலுவையில் இருக்கக்கூடாது

அட்டவணைகள்I, II, III மற்றும் IV-ல் குறிப்பிடப்பட்டுள்ள உரிமக் கட்டண விகிதங்கள் 01.04.2024தேதி முதல் அமுலுக்கு வரும்

**குறிப்பு**-(எ) எந்தவொரு நிதி ஆண்டும் ஏப்ரல் முதல் தேதி துவங்கி மார்ச்31ம் தேதி முடிவடையும்

## அட்டவணை I

[See rules 289(1), (2) and (5)]

1.பொருந்தக்கூடிய தன்மை

1948 -ம் ஆண்டு தொழிற்சாலை சட்டம் ) 1948 -ம் ஆண்டு மத்தியச் சட்டம் LXM) 1951-ம் ஆண்டு தொழிற்சாலைகள் (மேம்பாடு மற்றும் முறைப்படுத்துதல் ) ) சட்டம் 1951-ம் ஆண்டு மத்தியச் சட்டம் 65), 1959 ஆம் ஆண்டு படைக்கலச் சட்டம் ) 1959-ம் ஆண்டு மத்தியச் சட்டம்54), 1884-ம் ஆண்டு வெடிபொருட்கள் சட்டம்)1884-ம் ஆண்டு மத்தியச் சட்டம் IV) மற்றும் 1934-ம் ஆண்டு பெட்ரோலிய சட்டம்) 1934-ம் ஆண்டு மத்தியச் சட்டம் XXX) ஆகியவற்றின் கீழ் உரிமம் வழங்கப்படாத பொருள் உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ள எந்தவொரு தொழில் அல்லது தொழிற்சாலை அல்லது நிறுவனத்திற்கும் இது பொருத்தும்

2.உரிமக்கட்டணம்:

அ) குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான உரிமக் கட்டணம் , 2006 ஆம் ஆண்டு குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுச் சட்டத்தின் படியான (2006-ம் ஆண்டு மத்தியச் சட்டம் 27), அத்தகைய தொழில் நிறுவனங்களின் வகைப்பாட்டின்அடிப்படையில் விதிக்கப்படும்

ஆ) அந்த தொழிற்சாலையின் வகைப்பாடு பொருட்கள் மற்றும் சேவைகள் வரி எ அல்லது சமீபத்திய வருமான வரி விபர அறிக்கையினை பயன்படுத்தி தீர்மானிக்கப்படும் விண்ணப்பதாரர் ஒரு செல்லுபடி ஆகக்கூடிய உதயம் பதிவு சான்றிதழ் மற்றும் வரி விவர அறிக்கைகளை கொண்டிருக்கவில்லை எனில் உரிமம் கோரப்படுகிற தொழில் நிறுவனத்தின் வகைப்பாட்டினை சான்று அளித்து படிவம் 17 இல் உள்ள பிரமாண பத்திரம் ஒன்றை அவர் சமர்ப்பிக்க வேண்டும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023-ல் குறு, சிறு நடுத்தர

தொழில் நிறுவனங்கள் மற்றும் பெரிய தொழிற்சாலைகளுக்கு உரிமம் வழங்கிட உரிமை கட்டணம் நிர்ணயம் செய்திட குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச தொழில் உரிமை கட்டணங்களுக்காக பட்டியல்

**(A) குறு தொழில் நிறுவனங்கள் (வருடத்திற்கான கட்டணம் )**

| நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் | குறைந்த பட்ச கட்டணம்(ரூ) | அதிக பட்ச கட்டணம்(ரூ) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| நகராட்சி மன்றம் | 1500/- | 3500/- |

**(B) சிறு தொழில் நிறுவனங்கள் (வருடத்திற்கான கட்டணம் )**

| நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் | குறைந்த பட்ச கட்டணம்(ரூ) | அதிக பட்ச கட்டணம்(ரூ) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| நகராட்சி மன்றம் | 3500/- | 5000/- |

**(C) நடுத்தர தொழில் நிறுவனங்கள் (வருடத்திற்கான கட்டணம் )**

| நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் | குறைந்த பட்ச கட்டணம்(ரூ) | அதிக பட்ச கட்டணம்(ரூ) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| நகராட்சி மன்றம் | 7500/- | 10000/- |

**(D) மற்றவை(அல்லது) பெரிய தொழிற்சாலை ( வருடத்திற்கான கட்டணம் )**

| நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் | குறைந்த பட்ச கட்டணம்(ரூ) | அதிக பட்ச கட்டணம்(ரூ) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| நகராட்சி மன்றம் | 10000/- | 35000/- |

**வர்த்தகங்கள்/ வியாபாரங்கள் பட்டியல் ( வருடத்திற்கான கட்டணம் )**

| வ. எண் | வர்த்தகங்கள் / வியாபாரங்கள் பட்டியல் | குறு தொழில் நிறுவனங்கள் எனில் 01.04.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் | சிறு தொழில் நிறுவனங்கள் எனில் 01.04.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் | நடுத்தர தொழில் நிறுவனங்கள் எனில் 01.04.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் | மற்றவை (அல்லது) பெரிய தொழிற்சாலை எனில் 01.04.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | தையல் பொருட்கள் உற்பத்தி செய்தல் | 1750/- | 3750/- | 8000/- | 11000/- |
| 2 | தையல் இயந்திரங்கள் உற்பத்தி செய்தல் | 1750/- | 3750/- | 8000/- | 11000/- |
| 3 | அனைத்து வகையான மின் மற்றும் மின்னணு தயாரிப்புகளை உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 9000/- | 12000/- |
| 4 | அனைத்து வகையான மின் மோட்டார்கள் மற்றும் பம்புகளை உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 9000/- | 12000/- |
| 5 | மின்சார மோட்டார்கள் மற்றும் பம்புகளை சேமித்து வைத்து விற்பனை செய்தல் | 2000/- | 4000/- | 9000/- | 12000/- |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 6 | கல் உடைத்தல் மற்றும் நொறுக்குதல் | 1600/- | 3750/- | 7750/- | 10500/- |
| | | 7 | காகித தயாரிப்புகளை உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 9000/- | 12000/- |
| | | 8 | அனைத்து வகையான உலோகங்களையும் உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 9000/- | 12000/- |
| | | 9 | அனைத்து வகையான கொள்கலன்களையும் , பாத்திரங்களையும் உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 9000/- | 12000/- |
| | | 10 | அனைத்து வகையான மோட்டார்கள் (மின்மோட்டார்கள் அல்லாத) மற்றும் பம்புகளை உற்பத்தி செய்தல் | 2500/- | 50000/- | 10000/- | 12500/- |
| | | 11 | அனைத்து வகையான தொழிற்சாலை இயந்திரங்களை உற்பத்தி செய்தல் | 2500/- | 50000/- | 10000/- | 12500/- |
| | | 12 | மோட்டார் வாகன உதிரி பாகங்களை உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 9000/- | 12000/- |
| | | 13 | அனைத்து வகையான கட்டுமான பொருட்களை உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 9000/- | 12000/- |
| | | 14 | அனைத்து வகையான பொறியியல் பணிகள் | 1750/- | 3750/- | 8000/- | 11000/- |
| | | 15 | செங்கல் சூளைகள் | 1750/- | 3750/- | 8000/- | 11000/- |
| | | 16 | அனைத்து வகையான ஆட்டோமொபைல் உதிரி பாகங்களை உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 9000/- | 12000/- |
| | | 17 | அனைத்து வகையான ஒப்பனைப் பொருட்களை உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 9000/- | 12000/- |
| | | 18 | அனைத்து வகையான நாட்டு மருந்துகள் ஒப்பனைப் பொருட்கள் மற்றும் மூலிகை பொருட்களை உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 9000/- | 12000/- |
| | | 19 | அனைத்து வகையான கட்டுறுவாக்க பணிகள் (Fabric Works) | 2000/- | 4000/- | 9000/- | 12000/- |
| | | 20 | துருப்பிடிக்காத எஃகு வேலை மற்றும் மெருகுக்கூட்டல் | 2000/- | 4000/- | 9000/- | 12000/- |
| | | 21 | அனைத்து வகையான ரசாயன பொருட்களை உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 9000/- | 12000/- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 22 | அனைத்து வகையான மருத்துவ உபகரணங்களை உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 9000/- | 12000/- |
| 23 | அனைத்து வகையான சலவை மற்றும் சுத்தப்படுத்தும் பொருட்களை உற்பத்தி செய்தல் | 2500/- | 5000/- | 10000/- | 12500/- |
| 24 | அனைத்து வகையான இயந்திர எண்ணெய்களை உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 9000/- | 12000/- |
| 25 | கொதிக்கலன் உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 9000/- | 12000/- |
| 26 | காற்றுப்பதனிகளை உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 9000/- | 12000/- |
